**செய்தி வெளியீடு எண்:501** **நாள்: 02.08.2017**

<u>சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாள் (3.8.2017)</u>

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், 3.8.2017 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகம், கிண்டியிலுள்ள சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்று சிறப்பிப்பார்கள்.

தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், சேலம் மாவட்டம், சங்ககிரியில் 3.8.2017 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு தீரன் சின்னமலை நினைவுச் சின்னம் அமைந்துள்ள இடத்தில் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு பி.தங்கமணி, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர்.வி.சரோஜா மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்..

மேலும், தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, ஈரோடு மாவட்டம், அரச்சலூர், ஓடாநிலையில், 3.8.2017 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தீரன் சின்னமலை ஆடிப்பெருக்கு விழா தமிழக அரசின் சார்பில் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், தீரன் சின்னமலை திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல், தீரன் சின்னமலை வாரிசுதாரர்களை கௌரவித்தல் மற்றும் தீரன் சின்னமலை வரலாற்றைக் குறிக்கும் வகையில் புகைப்படக் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர்.வி.சரோஜா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் மற்றும் ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கூட்டுறவு சங்க நிர்வாகிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**